# தூய லூர்து அன்னை ஆலயம்


50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்<br>*frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ<br>*fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்<br>*nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com*<br>*ololpastoral@gmail.com* |


| | | |
|---|---|---|
| 29 ஏப்ரல் 2018 | **பாஸ்கா காலம் 5ம் ஞாயிறு** | இரண்டாம் ஆண்டு |




அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

இயேசு தம்மைத் 'திராட்சைச் செடி' என்றும், தம்மில் நம்பிக்கை கொள்வோரைத் 'திராட்சைக் கொடி' என்றும் உருவகித்துக் கூறுகிறார். செடியோடு இணைந்திருக்கின்ற கொடிதான் உயிரோடு இருக்கும். செடியை விட்டுப் பிரிந்த கொடி மடிந்துபோகும். இந்த உருவகத்தில் இயேசு இரு உண்மைகளைக் காட்டுகிறார். முதல் உண்மை இயேசுவுக்கும் தந்தை இறைவனுக்கும் இடையே உள்ள உறவு. இயேசு என்னும் திராட்சைச் செடியை 'நட்டு வளர்ப்பவர்' இயேசு தந்தை என அழைக்கின்ற கடவுள்தாம். இதனால் இயேசுவுக்கும் தந்தைக்கும் இடையே நிலவுகின்ற உறவு தெரிகிறது. இயேசு தந்தையோடு கொண்டுள்ள உறவு மனித உறவுகளைக் கடந்தது. ஆனால் அன்பின் நிறைவும் முழுமையும் அந்த உறவில் உண்டு. அந்த அன்பு எவ்வளவு ஆழமானது என்றால் இயேசு தம்மைக் காண்போர் தம் தந்தையையே காண்கின்றனர் என்றார். அதே நேரத்தில் இயேசு தந்தையின் திருவுளத்திற்கு முற்றிலும் அமைந்தவராகவே இவ்வுலகிற்கு வந்தார். தந்தை தமக்களித்த பணியை நிறைவேற்றுவதில் இயேசு கருத்தாயிருந்தார்.

தந்தையாம் கடவுளுக்கும் இயேசுவுக்கும் இடையே நிலவுகின்ற உறவு இயேசுவுக்கும் சீடர்களுக்கும் இடையே நிலவுகின்ற உறவாக மாறுகிறது. அதாவது, இயேசு தம்மைத் திராட்சைச் செடிக்கும் தம் சீடர்களைத் திராட்சைக் கொடிக்கும் ஒப்பிடுகிறார். இயேசு செடி என்றால் அவரில் நம்பிக்கை கொள்ளும் நாம் கொடிகள். கொடி செடியோடு இருந்தால் வாழ்வு பெறும் செடியைப் பிரிந்த கொடி மடியும். இயேசுவோடு இணைந்திருத்தலில் இரு அம்சங்கள் உண்டு. முதலில் நாம் அவரிடத்தில் நம் முழு நம்பிக்கையையும் வைக்க வேண்டும். அதன் விளைவாக நாம் அவருடைய அன்புக் கட்டளையை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு செயல்படும்போது கடவுளுக்கு நாம் மாட்சி அளிப்போம். கடவுள் நமக்குத் தருகின்ற வாழ்வு மறைந்துபோகும் ஒன்றல்ல. அது எந்நாளும் நீடிக்கின்ற நிலைவாழ்வு. அதே நேரத்தில் நம்மில் உறைகின்ற இறைவாழ்வு நற்கனிகளாக வெளிப்பட வேண்டும். அன்பிலிருந்தும் இறைநம்பிக்கையிலிருந்தும் பிறக்கின்ற கனிகள் மனித குலம் வாழ்வதற்கு வழியாகும். பிறருடைய நலனை நாம் முன்வைத்துச் செயல்படும்போது நாம் 'மிகுந்த கனி தருவோம்'. மனிதர் வாழ்வு பெறுவதே கடவுளுக்கு மாட்சியாக அமையும். நல்வாழ்த்துக்கள்.




## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்



**01-05-2018** செவ்வாய் ~ தொழிலாளர் தினம்.

அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை.

காலை **9** மணிக்கு ஆங்கிலத் திருப்பலி, காலை **10** மணிக்கு தமிழ் திருப்பலி

(மதியம் **12** மணி முதல் நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.)



## நற்கருணை ஆராதனை வழிபாடு



**06-05-2018** ஞாயிறு, மாலை **5:00** மணி

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காக செபிக்கவும், உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

## முழு இரவுத் திருவிழிப்புச் செப வழிபாடு

**12-05-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை கடவுளிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

# ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா திருப்பலி நேரங்கள்

**09-05-2018,** புதன் ~ மாலை **6:30** மணிக்கு ஆங்கிலத் திருப்பலி, **இரவு 8:00 மணிக்கு தமிழில் திருப்பலி.**

**10-05-2018,** வியாழன் ~ மதியம் **12:30,** மாலை **6:30,** இரவு **8:00** மணிக்கு ஆங்கிலத் திருப்பலி.

திருப்பலியில் கலந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம்.



# இடைவிடா சகாய அன்னை நவநாள்

**சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.

# தமிழ் மறைக்கல்வி வகுப்புகள்

நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் ஞாயிறு காலை **9:30** மணித் தமிழ் திருப்பலி முடிந்தவுடன் சுமார் **45** நிமிடங்களுக்கு மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறும். நம் பிள்ளைகளுக்கு நன்கு புரியும் வண்ணம் தினசரி செபங்களும், திருப்பலி செபங்களும், பாடங்களும், தமிழில் விளக்கிச் சொல்லித்தரப்பட்டு, புதுநன்மை மற்றும் உறுதிப்பூசுதல் பெற அவர்கள் தயாரிக்கப்படுவர். தமிழ் கத்தோலிக்கப் பெற்றொர்கள் அனைவரும் உங்கள் பிள்ளைகளை தகுந்த வகுப்புக்களில் உடனே பதிவு செய்யும்படி அன்புடன் வேண்டுகிறோம். நன்றி.

# விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யை | தை | ந் | த | த் | எ | ண் | ம் | பா | ந |
| டு | ல | ய | த | றை | ன் | சா | ச் | ன | ம |
| பே | நா | வ | வெ | ட | னு | ளெ | க | ர் | ம |
| டு | ர | செ | ற் | அ | ட | ன் | க் | ப | னா |
| ட் | யா | ன் | லு | தை | ன் | வே | டு | சா | ய் |
| லி | தி | நூ | பு | த் | ய் | ஞா | கொ | த் | ரூ |
| பி | மை | றை | ட | ள | து | வி | யூ | தே | கி |
| ப் | அ | ட | க | ள் | லா | ம் | ப் | லே | ரே |
| ரு | ட் | வ | ட் | உ | வ | றை | லி | ற் | க் |
| நெ | கா | மே | ரை | ள் | த | டா | கொ | னி | க |

1. __________ பவுலைத் திருத்தூதர்களிடம் அழைத்துச் சென்றார்.
2. __________ மொழி பேசும் யூதரிடம் சென்று அவர்களோடு வாதாடினார்.
3. ஆண்டவரே, நான் __________ புகழ் உம்மிடமிருந்து எழுவதாக!
4. கடவுள் திருமுன் நம் __________ அமைதிப்படுத்த முடியும்.
5. கடவுள் நம் __________ விட மேலானவர், அனைத்தையும் அறிபவர்.
6. என்னிடமுள்ள __________ கிளைகள் அனைத்தையும் அவர் தறித்து விடுவார்.
7. ஒருவர் __________ இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்.
8. அக்கிளைகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு __________ எரிக்கப்படும்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | திருத்தூதர்பணிகள் 9 : 26 – 31 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 22 : 25-26, 27,29, 30,31 |
| **பதிலுரை:** | ஆண்டவரே, நான் செலுத்தும் புகழ் உம்மிடமிருந்து எழுவதாக! |
| **இரண்டாம் வாசகம்:** | 1 யோவான் 3 : 18 – 24 |
| **நற்செய்தி வாழ்த்தொலி:** | ‘நான் உங்களோடு இணைந்திருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். ஒருவர் என்னுடன் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்’ என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா! |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 15 : 1 – 8 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ்   | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.